செ.வெ.எண்: 349 நாள்: 11.06.2019

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற குடிகள் மாநாட்டில் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

---

புதுக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் குடிகள் மாநாடு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (11.06.2019) நடைபெற்றது. இந்த நிகழ்வின் போது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது.

ஆண்டு தோறும் வருவாய் தீர்வாய கணக்கு முடிக்கும் வகையில் ஜமாபந்தி நடத்தப்படுகிறது. அந்த வகையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் 1428 ஆம் பசலி ஆண்டு வருவாய்த் தீர்வாய கணக்குகள் வருவாய் தீர்வாயம் குறித்த ஜமாபந்தி நடைபெற்று வருகிறது.

அதனடிப்படையில் புதுக்கோட்டை வட்டத்திற்கான ஜமாபந்தி மட்டும் இன்றைய தினம் நிறைவு பெறுகிறது. இதனையொட்டி மாலையில் குடிமக்கள் பங்கு பெறும் குடிகள் மாநாடு நடைபெற்றது. இக்குடிகள் மாநாட்டில் மின் இணைப்பு பெறுவதற்கான தடையின்மை சான்று 1 நபருக்கும், உட்பிரிவு பட்டா மாறுதல் 1 நபருக்கும், பட்டா மாறுதல் 11 நபர்களுக்கும், முதியோர் உதவித்தொகைக்கான ஆணை 5 நபர்களுக்கும், கஜா புயலினால் பாதிக்கப்பட்ட 14 நபர்களுக்கு வீட்டுமனை பட்டாவும் என மொத்தம் 32 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் தமிழக அரசின் இத்தகைய நலத்திட்ட உதவிகளை பெறும் பயனாளிகள் இதனை உரிய முறையில் பயன்படுத்தி வாழ்வில் முன்னேற வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது வட்டாட்சியர்கள் பரணி, திருமலை உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**